**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/2022 | அரசுத்தரப்பு | P.W.4 |
| பெயர் | சுகன்யா | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | பாலமுருகன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.06.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருகோகர்ணம் கம்மாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். கருப்பயைா வீடு எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ளது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 15.08.2021 தேதியில் காலை சுமார் 7.00 மணி அளவில் நான் என் வீட்டிலிருந்து பார்த்தபோது கருப்பையா வீட்டில் கும்பலாக இருந்தது. கருப்பையா வீட்டில் எதற்காக கும்பலாக இருந்தார்கள் என்று நான் சென்று பார்க்கவில்லை. போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கி சென்றார்கள். என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.4. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. அது அ.சா.ஆ.5.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது 15.08.2021 தேதி இரவு 2.45 மணி அளவில் கருப்பையா வீட்டில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டு நிலைக்கதவுன் துணியும், ஒரு ஆடும் எரிந்ததாகவும், 16.08.2021 தேதி காலை 11 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் சம்பவ இடத்திலிருந்து ஸ்கிரின் துணியையும், உடைந்த பாட்டில்களை கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக தான் நானும் மலர்கொடி என்பவரும் பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சுகன்யா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.